# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 04.09.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

*ரமலான் மாதம் திருக்குர்ஆன் அருளப்பெற்ற மாதமாகும். குர்ஆன் எல்லா மக்களுக்கும் நேர்வழி காட்டக் கூடியதாகும். நேர்வழியைத் தெளிவாக்கக் கூடியதும் (நன்மை தீமையை) பிரித்தறியக் கூடியதுமாகும். எனவே உங்களுள் அம்மாதத்தைக் காண்பவர் அதில் நோன்பு நோற்க வேண்டும். ஆனால் நோயாளியாகவோ, பயணியாகவோ இருப்பவர் (விட்டுப்போன நோன்பை) மற்ற நாட்களில் கணக்கிட்டு (நோற்கவும்). அல்லாஹ் உங்களுக்கு எளிதை விரும்புகிறான். உங்களுக்கு கடினத்தை (தர) விரும்புவதில்லை. நீங்கள் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்வதற்காகவும், அல்லாஹ் உங்களுக்கு நேர்வழி காட்டியதற்காக நீங்கள் அவனைப் பெருமைப்படுத்துவதற்காக, நீங்கள் அவனுக்கு நன்றி செலுத்துவதற்காகவுமே (இந்தக் கட்டளையை அவன் பிறப்பித்துள்ளான்). (2:186)*

இந்த வசனத்தின் முதல் பகுதி தொடர்பாக இன்று நான் ஒரு சிலவற்றை எடுத்துக் கூறுவேன். ரமலான் மாதத்திற்கு திருக்குர்ஆனோடு ஒரு நெருங்கிய தொடர்பு உண்டு. இவ்வசனத்தில் அல்லாஹ் ரமலான் மாதம் திருக்குர்ஆன் அருளப்பெற்ற மாதமாகும் என்று கூறுகிறான். ரமலான் மாதத்தின் நோன்பு வெறுமனே கடமையாக்கப்படவில்லை. மாறாக, இந்த அருளுக்குரிய மாதத்தில் அல்லாஹ் திருக்குர்ஆன் என்ற மகத்துவம் வாய்ந்த வேத நூலை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது இறக்கினான். அல்லது இறங்க ஆரம்பித்தது. ரமலான் மாதம் வரை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது இறங்கிய திருக்குர்ஆனின் வசனங்களை ரமலானில் ஜிப்ரீல் (அலை) ஓதிக் காட்டுவார்கள் என்று ஹதீஸில் நாம் பார்க்கிறோம். இறைவனுடைய இறுதியான, முழுமையான ஷரீஅத் இந்த மாதத்தில் இறங்கியது என்று கூறும்போது இந்த மாதத்தின் புனிதத்தன்மை இன்னும் பிரகாசம் அடைகிறது.

நோன்பு வைப்பது கடமையாக்கப்பட்டுள்ளது என்று இறைவன் கூறியவுடன் அதோடு துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதன் நற்செய்தியையும் வழங்கியுள்ளான். இதற்கு அடுத்த வசனங்களில் ரமலானின் பிற கட்டளைகளை வழங்கியுள்ளான். நோன்பு நோற்பது, இறைவனை வணங்குவது இவை மட்டும் போதுமானது அல்ல. மாறாக இந்த மாதத்தில் திருக்குர்ஆனின் பக்கமும், அதனை ஓதுவதன் பக்கமும் உங்களுக்கு கவனம் இருக்க வேண்டும் என்ற கருத்தை அல்லாஹ் இதில் வலியுறுத்தியுள்ளான். அல்லாஹ் இந்த மாதத்தில் மனித குலத்தின் முழுமையானவர் மீது தனது இறுதியான, முழுமையான ஷரீஅத்தை திருக்குர்ஆனின் வடிவில் இறக்கினான் என்பதால் இந்த மாதத்தின் சிறப்பு இன்னும் அதிகமானது. இறைவனின் நெருக்கத்தைப் பெறுவதற்கான வழிகள், துஆ செய்யும் முறை ஆகியவற்றை இறைவன் திருக்குர்ஆனில் கற்றுக் கொடுத்ததன் காரணமாக உங்களுக்கு தெரிந்தது. இந்த நூலை ஓதுவது மிகவும் அவசியமானதாகும். குறிப்பாக ரமலானில் இதை ஓதுதல் வேண்டும். முழு வருடமும் இதன் பக்கம் கவனம் இருந்து வர வேண்டும்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கடைசி ரமலானில் ஜிப்ரீல் (அலை) இரண்டு முறை திருக்குர்ஆனை முழுமையாக ஓதினார்கள் – ஹதீஸ். எனவே இந்த சுன்னத்தைப் பின்பற்றியவாறு மூஃமின் ரமலானில் இரண்டு முறை திருக்குர்ஆனை முழுமையாக ஓதி முடிக்க முயற்சி செய்ய வேண்டும். இரண்டு முறை ஓதி முடிக்க முடியாவிட்டால் குறைந்தபட்சம் ஒரு முறையாவது ஓதி முடிக்க வேண்டும். இது தவிர தர்ஸ், தராவீஹ் போன்ற ஏற்பாடுகளில் திருக்குர்ஆனை கேட்க வேண்டும். சிலர் வேலைக்கு செல்கிறார்கள். கேசட்டுகளும், CD –க்களும் கிடைக்கின்றன. அதை காரில் போட்டு கேட்டுக் கொண்டே பயணம் செல்லுங்கள்.

இவ்வாறு எவ்வளவு அதிகமாக திருக்குர்ஆனை ஓதவும் கேட்கவும் முடியுமோ அந்த அளவுக்கு அதிகமாக இந்த மாதத்தில் கேட்கவும், ஓதவும் வேண்டும்.

வெறுமனே ஓதுவது மட்டுமின்றி திருக்குர்ஆனில் பொதிந்துள்ள ஞானங்களைத் தேட வேண்டும். பிறகு முழு வருடமும் நீங்கள் தேடிய கட்டளைகளை பேணி நடக்க முயற்சி செய்ய வேண்டும். அதன் பிறகு இந்த கட்டளைகளைப் பேணுவதில் உயர் தரமான நிலையை அடைவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் ரமலானின் முக்கியத்துவம் விளங்கும். நோன்பு மற்றும் இறைவணக்கம் ஆகியவற்றின் உரிமையும் செலுத்தப்படும். ஏனென்றால் நான் செய்து கொண்டிருக்கின்ற வேலையின் நோக்கம் என்னவென்று தெரியவில்லை என்றால், ஏன் இறைவன் இந்தக் கட்டளைகளை வழங்கியுள்ளான்? என்று தெரியவில்லை என்றால் அந்த செயல்களின் உரிமையை ஹக்கை நிறைவேற்ற முடியாது. என்ன செய்ய வேண்டும்? என்பது கூட தெரியாமல் போய் விடும்.

(தக்வா) இறையச்சத்தின்படி செயல்படுங்கள்; நல்ல செயல்களை செய்யுங்கள் என்று மட்டும் கேட்டுக் கொண்டிருந்து, தக்வா என்றால் என்னவென்றும், நற்செயல்கள் என்றால் என்னவென்றும் தெரியவில்லை என்றால் ஒருவரைப் பார்த்து ஒருவர் பின்பற்றி நடப்பார்; அல்லது பொதுவாக சொற்பொழிவுகளை கேட்டு வந்து விடுவார். குத்பாவை கேட்டு விட்டு சென்று விடுவார். அவ்வளவு தான். வேலை நடந்து கொண்டுதான் இருக்கும். ஆனால் அதில் (ரூஹ்) உயிர் இருக்காது. அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்.

எவர்களுக்கு நாம் வேதம் வழங்கியுள்ளோமோ அவர்கள், அதனை ஓத வேண்டிய முறைப்படியே ஓதுகின்றனர். (2:122) அதாவது இதனை ஓதி முறைப்படி இதனை சிந்தித்துப் பார்க்க வேண்டும். தொடர்ச்சியாக ஓதி வர வேண்டும். அதோடு ஓதியதற்கு ஏற்ப முறைப்படி செயல்படவும் வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்** கூறுகின்றார்கள். இதே கருத்து திருக்குர்ஆனிலும் வந்துள்ளது.

*திருக்குர்ஆனை முதுகுக்குப் பின்னால் தூக்கி எறிந்து விடாதீர்கள். (25:31)* எனவே இதன்படி நன்கு சிந்தித்து செயல்பட வேண்டும். தொடர்ந்து ஒதியும் வர வேண்டும்.

நான் ஓதிய வசனத்தில் ரமலான் மாதம் திருக்குர்ஆன் அருளப்பெற்ற மாதமாகும் என்று கூறிய பின் எல்லா மக்களுக்கும் நேர்வழியைக் காட்டக் கூடியதாகும். நேர்வழியைத் தெளிவுபடுத்தக் கூடியதாகும். அவ்வாறே நன்மை தீமையைப் பிரிததுக் காட்டக் கூடியதும் ஆகும் என்று கூறுகிறான். எனவே இதை ஓத வேண்டிய உரிமையை நிறைவேற்றாமல் நேர்வழிக்கு விளக்கம் கிடைக்காது. உண்மைக்கும் பொய்யிற்கும் உள்ள வித்தியாசம் தெரியாது. எனவே நோன்பின் உண்மையான ஹக்கை நிறைவேற்ற வேண்டும் என்றால் திருக்குர்ஆனை ஓதுவதும் அதில் உள்ள கட்டளைகளைத் தேடுவதும் மூஃமின்களின் மீது கடமையாகும்.

திருக்குர்ஆனை ஒதுவது பற்றி இன்னோரிடத்தில் அல்லாஹ் இவ்வாறு கட்டளை இட்டுள்ளான்:

நான் கட்டுப்பட்டு நடப்பவர்களைச் சார்ந்தவனாக விளங்க வேண்டும் என்றும், நான் குர்ஆனைப் படித்துக் காட்ட வேண்டும் என்றும் கட்டளையிடப்பட்டுள்ளேன். (27:92,93)

எனவே இறைவன் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மீது இறக்கிய முழுமையான ஷரீஅத்தை நாம் நம்புகின்றோம் என்று வாதம் செய்து, இக்காலகட்டத்தின் வாக்களிக்கப்பட்ட மஸீஹை ஏற்றுக் கொண்டுள்ளோம் என்று பிரகடணம் செய்கிறோம் என்றால் இந்த முழுமையான வேத நூலாகிய திருக்குர்ஆனை ஓத வேண்டிய ஹக்கை நிறைவேற்றவும் முயற்சி செய்ய வேண்டும்.

இந்த ரமலானில் நாம் இதை தொடர்ந்து ஓத உறுதி எடுக்கும் அதே வேளையில் ரமலானுக்குப் பிறகும் தினமும் ஓதி விடுவோம் என்ற உடன்படிக்கையும் செய்யுங்கள். இதை நாம் நம் மீது கடமையாக்கிக் கொள்ள வேண்டும். இதன் கட்டளைகளின்படி செயல்பட முடிந்த வரை முயற்சி செய்ய வேண்டும். ஏனென்றால்

இதுதான் இறைவனின் நெருக்கத்தை நமக்கு பெற்றுத்தரும். இதுதான் நமது ரமலான் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான காரணமாக அமையும். இதன் பக்கம் தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு குறிப்பாக கவனமூட்டியுள்ளார்கள்.

உங்களுக்கு நான் கூறும் முக்கியமான அறிவுரை என்னவென்றால், நீங்கள் திருக்குர்ஆனை முதுகுக்குப் பின்னால் தூக்கி எறிந்து விடாதீர்கள். உங்களது வாழ்க்கை இதில் தான் (திருக்குர்ஆனில் தான்) இருக்கிறது.

இந்த போதனையை நினைவில் கொண்டு செயல்படுங்கள். வெறுமனே திருக்குர்ஆனை ஓதுவது மட்டுமல்லாமல் இதைப் பின்பற்றி நடக்கவும் வேண்டும். இல்லையென்றால் நீங்கள் உயிரற்ற பிணமாக ஆகிவிடுவீர்கள். ஆன்மிக உயிர் இருக்காது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் செய்த உடன்படிக்கை வீணானதாகி விடும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொடர்ந்து இவ்வாறு கூறுகின்றார்கள்:**

திருக்குர்ஆனுக்கு மதிப்பளிப்பவர் வானத்தில் கண்ணியத்தைப் பெறுவார். எல்லா கூற்றுக்கள் மற்றும் ஹதீஸை விட திருக்குர்ஆனுக்கு முன்னுரிமை வழங்குபவருக்கு வானத்தில் முன்னுரிமை வழங்கப்படும்.

வானத்தில், கண்ணியத்தைப் பெறுவதும், முன்னுரிமை வழங்கப்படுதல் என்றால் என்ன? இறைவன் அருள் புரிந்தவாறு தனது நெருக்கத்தை வழங்குவான். இதுவே கண்ணியம் வழங்கப்படுதல் என்பதாகும். துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கான அடையாளங்கள் கிடைக்கும். சமூக தீமைகளை விட்டும் மனிதன் பாதுகாப்பாக இருப்பான்.

முதலில் நீங்கள் என்னை அடைவதற்கு முயற்சி செய்தால் நான் உங்களை நோக்கி ஓடி வருவேன் என்று அல்லாஹ் கூறுகிறான். இந்தக் காட்சியை காண்பதற்கு நாம் திருக்குர்ஆனுக்கு கண்ணியம் வழங்க வேண்டும். அதை ஓத வேண்டிய முறைப்படி ஓத வேண்டும். திருக்குர்ஆனின் கட்டளையின்படி செயல்பட வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மனித இனத்திற்கு வழிகாட்ட இந்த பூமியில் திருக்குர்ஆனைத் தவிர வேறு வேத நூல் கிடையாது. ஆதமின் மக்களுக்கு முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களைத் தவிர வேறு ரஸூலோ, சிபாரிசு செய்பவரோ இல்லை. எனவே கண்ணியமிக்க இந்த நபி (ஸல்) அவர்களை உண்மையாக நேசியுங்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு மேலாக மற்ற எவருக்கும் எவ்வகையான முன்னுரிமையும் வழங்காதீர்கள். இதன் மூலம் வானத்தில் நீங்கள் ஈடேற்றம் பெற்றவர்கள் என எழுதப்படுவீர்கள். நஜாத் (ஈடேற்றம்) என்பது இறந்த பிறகு கிடைக்கும் ஒன்று அல்ல. மாறாக, இவ்வுலகிலேயே தனது ஒளியைக் காட்டுவதுதான் உண்மையான நஜாத் ஆகும். ஈடேற்றம் பெற்றவர் யார்? இறைவன் உண்மையாளன் என்றும், முஹம்மத் (ஸல்) அவர்கள் இறைவனுக்கும் படைப்பினங்களுக்கும் இடையில் சிபாரிசு செய்பவர்கள் ஆவார்கள் என்றும் வானத்தின் கீழ் இவர்களுக்கு சமமாக வேறு எந்த ரஸூலும் இல்லை. அவ்வாறே திருக்குர்ஆனுக்கு நிகரான வேறு எந்த வேத நூலும் இல்லை என்று நம்ப வேண்டும். இவ்வாறு நம்புகின்றவரே ஈடேற்றம் பெற்றவர் ஆவார்.

நிரந்தரமாக யாரும் வாழ்வதை இறைவன் விரும்பவில்லை. ஆனால் இந்த உன்னதாமான நபி நிரந்தரமாக வாழ்ந்து வருகிறார். இந்த நபியின் ஷரீஅத்தின் பலனையும் ஆன்மீக பலனையும் கியாமத் வரை நீட்டித்து இறைவன் இந்த நபியின் வாழ்வை நிரந்தரமாக்கி விட்டான். இறுதியில் இந்த ஆன்மீக பயனைக் கொண்டு இஸ்லாமிய கட்டடத்தை முழுமையாக்குவதற்கு அவசியமான வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியை இறைவன் அனுப்பினான். ஏனென்றால் மூஸாவின் தொடருக்கு அனுப்பப்பட்டதுபோல்

முஹம்மதிய தொடரிலும் ஆன்மீக முறைப்படி ஒரு மஸீஹை அனுப்பாமல் இந்த உலகம் அழியப் போவதில்லை.

நாம் மிகவும் பாக்கியசாலிகளாக இருக்கிறோம். இந்த மஸீஹின் ஜமாஅத்தில் இணைந்து இறைவனின் முழுமையான ஷரீஅத் திருக்குர்ஆனின் வடிவில் நம்மிடம் இருக்கிறது. இதன் உயர் தகுதியைப் புரிந்து கொள்வோம் என்று உறுதி எடுத்துள்ளோம். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கத்மே நுபுவ்வத் பதவியைச் சரியாகப் புரிந்துள்ளோம். ஆனால் பிற முஸ்லிம்கள் இந்த அறிவை இழந்துள்ளார்கள். இவ்வாறு இது நம்மை பிறரிடமிருந்து பிரித்துக் காட்டுகிறது. திருக்குர்ஆனின் போதனைகளைப் புரிந்து அதன் உண்மைத்தன்மையை அறிந்து அதன் மீது உண்மையான மரியாதையை நமது உள்ளத்தில் நிலைபெறச் செய்ய வேண்டும். இது நமது ஒவ்வொரு சொல்லாலும் செயலாலும் வெளிப்பட வேண்டும். நமது சொல்லாலும் செயலாலும் வெளிப்படுத்தவில்லை என்றால் இது திருக்குர்ஆனை முதுகுக்குப் பின்னால் தூக்கி எறிந்து விடுவதாகி விடும். இந்த நிலையை ஒரு முன்னறிவிப்பின் வடிவில் இறைவன் திருக்குர்ஆனில் கூறியுள்ளான்.

**சூரா ஃபுர்கானில் அல்லாஹ் கூறுகிறான்:**

*என் இறைவா! என் சமுதாயத்தினர் இந்தக் குர்ஆனை முதுகுக்குப் பின்னால் தூக்கி எறிந்து விட்டனர் என்று தூதர் கூறுவார். (25:31)*

மக்கள் இதைப் படிக்கிறார்கள். ஆனால் இதன்படி அறவே செயல்படுவதில்லை. இது அஞ்ச வேண்டிய தருணமாகும். ஒவ்வொரு அஹ்மதியும் கவலைப்பட வேண்டிய நேரம் இதுவாகும். நாம் இஸ்லாத்தின் இமாமை திருக்குர்ஆன் ஆட்சியை நாம் நம்மில் நிலைபெறச் செய்ய வேண்டும் என்பதற்காக ஏற்றுக் கொண்டுள்ளோம். நாம் இந்த அழகிய போதனையின்படி செயல்படுவதற்கும் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கும் முயற்சி செய்ய வேண்டும். திருக்குர்ஆனின் போதனையை அறிந்து அதன்படி செயலாற்றுவது தான் இந்த அருளுக்குரிய வேத நூலை கைவிட்டு முதுகுக்குப் பின்னால் தூக்கி எறிவதை விட்டு நம்மை காப்பாற்றும்.

**இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

திருக்குர்ஆன் உண்மையான அருட்கொடைகளின் நீரூற்று ஆகும். இது ஈடேற்றத்திற்கான உண்மையான வழியாகும். திருக்குர்ஆனின்படி செயல்படாதவர்கள் தவறிழைத்தவர்கள் ஆவர். அவ்வாறு இதன்படி செயல்படாமல் இருப்பவர்களுக்கு இதன் மீது நம்பிக்கை இல்லை. அவர் இதை இறைவனின் வேதம் என்று ஏற்றுக் கொள்ளவில்லை. இவ்வாறானவர்கள் இதை விட்டு மிகத் தொலைவில் இருக்கின்றனர். ஆனால் இது அல்லாஹ்வின் வேதம் என்றும், இது ஈடேற்றத்திற்கான நோய் தீர்க்கும் மருந்து எனவும் நம்புகின்றவர் இதன்படி செயல்படாவிட்டால் இது எவ்வளவு கவலைக்குரிய விஷயமாகும்! இவர்களில் பெரும்பாலானவர்கள் முழு வாழ்நாளிலும் இதை ஓதவே இல்லை. இவ்வாறு இறை வேதத்தை விட்டு விலகியிருப்பவர்களின் உதாரணம் யாதெனில், இந்த நீரூற்று மிகவும் தூய்மையானது, சுவையானது. மேலும் இந்த நீரூற்றின் தண்ணீர் பல்வேறு நோய்களுக்கு மருந்து ஆகும் என்று உறுதியாக நம்பிக்கை கொண்ட ஒருவர், தான் தாகமாகவும், பல்வேறு நோய்களுக்கு ஆளாகியும் இருந்தும் கூட அந்த நீரூற்றின் பக்கம் நெருங்காமல் அதிலிருந்து தண்ணீரைக் குடிக்காமல் இருந்தால் இது எவ்வளவு அறியாமை மற்றும் பேரிழந்தத் தன்மை என்பதை சிந்தித்துப் பாருங்கள். அந்த நீரோடையில் அவர் தனது வாயை வைத்திருக்க வேண்டும். அதிலிருந்து மனநிறைவோடு தண்ணீரைக் குடித்து சுவையையும் அதன் இனிமையையும் அவர் அனுபவித்திருக்க வேண்டும். ஆனால் இது எல்லாம் அவருக்கு நன்றாக தெரிந்திருந்தும், ஒன்றுமே அறியாதவனைப் போன்று விலகி இருந்து, மரணம் அவனைத் தழுவிக் கொண்டு அவனை அழித்து விடும் வரை அவன் அதை (அந்த நீரூற்றை) விட்டு விலகி இருக்கிறான். இந்த மனிதனின் நிலை மிகவும் பரிதாபத்திற்குரியதாகும். மேலும் இது பாடம் புகட்டக் கூடியதாகும். முஸ்லிம்களின் நிலை இவ்வாறுதான்

இருக்கிறது. எல்லா முன்னேற்றங்களுக்கும், வெற்றிகளுக்கும் திருக்குர்ஆன் ஒன்றுதான் வழி என்று தெரிந்திருக்கிறார்கள். ஆனால் இதன் பக்கம் சற்றும் கவனம் செலுத்தப்படுவதில்லை. ஒருவர் மிகவும் அனுதாபத்துடன், அனுதாபம் மட்டுமல்லாமல் இறைவனின் கட்டளையைப் பெற்று இதன் பக்கம் அழைத்தால் அவரை பொய்யன் என்றும், தஜ்ஜால் என்றும் கூறப்படுகிறது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்** தன்னைப் பற்றி இவ்வாறு கூறுகின்றார்கள்: அதாவது நான் உள்ளத்தின் வேதனையோடு இதன் பக்கம் மக்களை அழைத்து, முஸ்லிம்களே! நீங்கள் திருக்குர்ஆனின்படி செயல்படுங்கள் என்று கூறினால் என்னைப் பார்த்து பொய்யன், தஜ்ஜால் என்றெல்லாம் ஏசுகின்றனர்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொடர்ந்து கூறுகின்றார்கள்:**

இதை விட சிறந்த சமுதாயத்திற்கு அதிகமாக கருணை காட்ட வேண்டிய நிலை ஏற்படுமா? முஸ்லிம்கள் இந்த நீரூற்றை மகத்துவமிக்க அருட்கொடை என்று எண்ணி இதை மதிக்க வேண்டும். இது இவர்களின் மீது கடமையாகும். இதன்படி செயல்படுவது தான் இதை மதிப்பது ஆகும். அந்தோ! முஸ்லிம்கள் இதைப் புரிந்து கொள்ள வேண்டுமே! அல்லாஹ் முஸ்லிம்களுக்காக ஒரு சிறந்த வழியைக் காட்டியிருக்கிறான். இதன்படி செயல்பட்டு பலன்பெற வேண்டும்.

இந்த மேற்கோளில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இன்றைய கால முஸ்லிம்களின் நிலையைப் படம்பிடித்துக் காட்டியிருக்கிறார்கள். தமது கவலையை வெளிப்படுத்தியுள்ளார்கள். இப்போது நமது பொறுப்பு அதிகமாகிறது. இந்த அழகிய போதனையை நாம் நமது வாழ்க்கையில் பேணி நடக்க வேண்டும். இதர முஸ்லிம் அமைப்புகளின் செயல்களின் காரணமாக முஸ்லிம் அல்லாதவர்கள் இஸ்லாத்திற்கு எதிராக கையை உயர்த்த தைரியம் காட்டுகின்றார்கள். அஹ்மதியின் செயல்களைப் பார்த்து இவர்கள் தமது சிந்தனையை மாற்ற வேண்டும். அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிகள் இஸ்லாத்தின் அழகிய போதனைகளை மக்கள் முன் எடுத்து வைக்கிறார்கள். ஜல்ஸா மற்றும் Seminar –கள் நடக்கும் போது திருக்குர்ஆனின் அழகிய போதனை அங்கு கூறப்படுகிறபோது முஸ்லிம் அல்லாதவர்கள் தம்மையும் அறியாமல் வெளிப்படையாக இஸ்லாத்தின் இந்த அழகிய போதனைகளை நாங்கள் முதன் முறையாக கண்டுள்ளோம் என்று ஒப்புக் கொள்கின்றனர்.

நாம் இவைகளை நமது அன்றாட வாழ்க்கையின் அங்கமாக்கிக் கொண்டால் நாம் வெறுமனே போதனைகளை வழங்குபவர்களாக மட்டும் இல்லாமல் செயல்படுபவர்களாகவும் இருப்போம். இவ்வாறு பிற முஸ்லிம்களுக்கு நாம் தத்தமது வட்டத்தில் இதை போதிப்பவர்களாக இருக்க வேண்டும். நீங்கள் எங்களோடு கருத்து வேறுபாடு கொண்டிருக்கிறீர்கள் என்றால் பரவாயில்லை. ஆனால் இஸ்லாத்தின் பெயரையும் அதன் முழுமையான போதனைகளையும் அவமானப்படுத்தாதீர்கள். திருக்குர்ஆனை நம்புகிறோம் என்று பிரகடனம் செய்தால் மட்டும் போதாது. மாறாக இதன் போதனைகளை சிந்தித்துப் பாருங்கள். இதில்தான் உங்களது ஈடேற்றம் உள்ளது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் முஸ்லிம்களின் இன்றைய நிலையையும் பிரச்சனைகளையும் எடுத்துக் கூறியுள்ளார்கள். இந்த நிலை இன்னும் முஸ்லிம்களிடம் நீடித்து வருகிறது. இன்னும் சில நேரங்களில் இந்த நிலை மேலும் கவலைக்குரியதாகிறது. திருக்குர்ஆனை செயல்படுவதற்கான சட்டமாக நீங்கள் ஆக்காத வரை இந்த பிரச்சனைகளிலிருந்தும், இன்னல்களிலிருந்தும் முஸ்லிம்கள் ஒருபோதும் விடுபட முடியாது. இஸ்லாம் என்ற பெயரைச் சொன்னதும் இஸ்லாம் வந்து விடாது. இஸ்லாத்தின் அழகு அதன் அழகிய போதனையால் தானாகவே வெளிப்படுகிறது. திருக்குர்ஆனின் விளக்கத்தை இறைவனின் புறமிருந்து கற்றுக்கொடுக்கப்படாமல் எந்த ஆலிமும் தானாகவே விளக்கிக் கூற முடியாது. இந்த காலகட்டத்தில் மக்கள் யாரை தஜ்ஜால் என்றும் பொய்யன் என்றும் அழைக்கிறார்களோ அவருக்குத்தான்

இறைவன் இதைக் கற்றுக் கொடுத்துள்ளான். அல்லாஹ் இவர்களின் மீது கருணை காட்டுவானாக. இவர்களுக்கு நல்லறிவை வழங்குவானாக. முன்பை விட அதிகமாக நமக்கு திருக்குர்ஆன் ஓதுவதற்கும், அதன்படி செயல்படுவதற்கும் தவ்ஃபீகை வழங்குவானாக. திருக்குர்ஆனின் மரியாதையை பேணுபவர்களாக நாம் இருக்க வேண்டும். எப்போதும் இதற்கு முன்னுரிமை வழங்குபவர்களாக நாம் இருக்க வேண்டும். எவ்வாறு கண்ணியம் நிலைபெறும்? எவ்வாறு இதற்கு முன்னுரிமை வழங்குவது? இது தொடர்பாக திருக்குர்ஆன் நமக்கு என்ன வழிகாட்டுகிறது? பல்வேறு இடங்களில் பல்வேறு கட்டளைகளைப் பிறப்பித்து வழிகாட்டுகிறது. சில வசனங்களையும், வசனங்களின் சில பகுதிகளையும் இங்கு நான் சுருக்கமாக எடுத்து வைக்கிறேன். இதில் இறைவன் எவ்வளவு சிறந்த முறையில் நமக்கு இது தொடர்பாக வழிகாட்டியுள்ளான் என்று பாருங்கள். நான் கூற விரும்பிய கருத்தை இன்று முழுமையாக கூற முடியாது என்று நினைக்கிறேன். ஒவ்வொருவரும் தத்தமது தகுதிக்கேற்ப திருக்குர்ஆனை சிந்தித்தால் புதிய புதிய கருத்துக்கள் இதில் தோன்றிக் கொண்டேயிருக்கும்.

திருக்குர்ஆனை ஓத வேண்டிய முறை என்ன? திருக்குர்ஆனை ஓதுவற்கு முன் உள்ளத்தை எவ்வாறு தூய்மைப்படுத்த வேண்டும்? இது தொடர்பாக அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுவதை முதலில் பார்க்கலாம்.

**அல்லாஹ் கூறுகிறான்:**

*நீர் திருக்குர்ஆனை ஓதும்போது விரட்டப்பட்ட ஷய்த்தானிடமிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுவீராக. (16:99)*

மனிதனை இறையச்சத்தின் வழியிலிருந்து கெடுப்பதற்காக ஷய்த்தான் வெளிப்படையான அறிவிப்பும் சவாலும் செய்திருக்கிறான். திருக்குர்ஆன் அல்லாஹ்வின் வேதமாகும். இதன் ஒவ்வொரு சொல்லும் இறையச்சத்தின் பாதையைக் காட்டக் கூடியதாகும். அல்லாஹ்வின் பக்கம் செல்வதன் பாதையில் வழிநடத்துவதாகும். எனவே நீங்கள் இறைவனின் நெருக்கத்தின் உயர் நிலைகளை அடைய விரும்பினால், திருக்குர்ஆனில் கூறப்பட்ட போதனைகளைப் புரிந்து கொள்ள விரும்பினால் திருக்குர்ஆனை ஓதுவதற்கு முன் தூய்மையான உள்ளத்தோடு அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுங்கள். ஷய்த்தானின் ஊசலாட்டத்திலிருந்தும், தாக்குதல்களிலிருந்தும் பாதுகாப்பு வேண்டுங்கள். நீங்கள் ஓதுகின்ற போதனையின்படி செயல்படுவதற்கான தவ்ஃபீகை வழங்குவதற்காக துஆ செய்யுங்கள். ஏனென்றால் இது ஒரு விலைமதிப்பற்ற கருவூலமாகும். இதை அடைகின்ற பாதையில் ஷய்த்தான் ஆயிரக்கணக்கான தடைகளை ஏற்படுத்துவான். ஷய்த்தானின் தீமையிலிருந்து பாதுகாப்பதற்காக துஆ செய்யாவிட்டால் எப்போது எந்த வழியில் ஷய்த்தான் இறைவனின் போதனையைப் புரிந்து கொள்வதை விட்டு தடுத்து விட்டான் என்பது கூட தெரியாமல் போய் விடும்.

திருக்குர்ஆன் அல்லாஹ்வின் வேதமாகும். இருந்தபோதிலும் ஷய்த்தானின் பிடியின் கீழ் வந்ததன் காரணமாக உங்களுக்கு நேர்வழி கிடைக்காது. திருக்குர்ஆனை தூய்மையான முறையில் அல்லாஹ்வின் பாதுகாப்பின் கீழ் வந்தவாறு ஓதுங்கள். இல்லையென்றால் இது உங்களுக்கு புரியாது. எனவே தான் அல்லாஹ் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகிறான்.

*அநீதியிழைப்பவர்களுக்கு இந்த குர்ஆன் நஷ்டத்தை அதிகரிக்கின்றது. (17:83).* ஆனால் மூஃமின்களுக்கு இது பயனளிக்கக் கூடியதாகும்.

பிறகு இன்னோரிடத்தில் **அல்லாஹ் கூறுகிறான்:** *அல்லாஹ் இரவு பகல் ஆகியவற்றின் அளவைத் தீர்மானிக்கின்றான். அதன் அளவினை உங்களால் கணிக்க முடியாது என்பதை அவன் அறிகின்றான். அவன் உங்களுக்கு அருள் செய்துள்ளான். ஆகவே உங்களுக்கு எளிதாக இருக்கும் அளவிற்கு நீங்கள் குர்ஆனை ஓதுங்கள். உங்களுள் சிலர் நோயாளியாகவும், மற்றுஞ்சிலர் அல்லாஹ்வின் அருளைத் தேடியவாறு பூமியில் பயணம் செய்பவர்களாகவும்*

*இன்னும் சிலர் அல்லாஹ்வின் வழியில் அறப்போர் செய்பவர்களாகவும் இருப்பார்கள் என்பதை அவன் அறிகின்றான்..... (73:21)*

இந்த வசனத்திற்கு முந்தைய பகுதிகளில் தஹஜ்ஜுத் தொழுகையின் பக்கம் கவனமூட்டப்பட்டுள்ளது. இதில் உங்களுக்கு தெரிந்த திருக்குர்ஆனின் பகுதிகளை ஓதுங்கள். இது தவிர திருக்குர்ஆனில் சிந்திப்பதற்காக எவ்வளவு அதிகமாக உங்களால் ஓத முடியுமோ அவ்வளவு அதிகமாக ஓதுங்கள். இதுவே ஒரு மூஃமினுடைய வேலையாகும் என்று அல்லாஹ் கூறுகிறான்.

தயஸ்ஸர மினல் குர்ஆன் என்றால் எவ்வளவு நாம் மனப்பாடம் செய்திருக்கிறோமோ அதுவே போதும் இதற்கு மேல் இன்னும் மனனம் செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டியதில்லை என்று பொருள் இல்லை. அல்லது திருக்குர்ஆனின் எவ்வளவு போதனைகளை நாம் தெரிந்திருக்கிறோமோ அவ்வளவு மட்டும் போதும். இனி அதிகமாக கற்றுக் கொள்ள வேண்டியதில்லை என்று பொருள் இல்லை. மாறாக, நம்மால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு அதிகமாக நாம் இதிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டும்.

**அல்லாஹ் கூறுகிறான்:**

*நீங்கள் நல்லவற்றில் ஒருவருக்கொருவர் முந்திக் கொள்ள முயற்சி செய்யுங்கள். (2:149, 5:49)*

திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள நன்மைகள் என்னவென்றே தெரியவில்லை என்றால் எவ்வாறு இதில் ஒருவரையொருவர் முந்த முடியும்? எனவே திருக்குர்ஆனை ஓதுவதும், கற்பதும் இதன்படி சிந்திப்பதும் செயல்படுவதும் அவசியமாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இவ்வாறு இல்ஹாம் இறங்கியது:**

**அல் கைரு குல்லுஹு ஃபில் குர்ஆன்** - அதாவது எல்லா நன்மைகளும் திருக்குர்ஆனில் உள்ளது. எனவே இந்த வசனத்தில் (73:21) **தயஸ்ஸர** என்பதன் பொருள் எவ்வளவு மனப்பாடமாக இருக்கிறதோ அதுவே போதும். மேற்கொண்டு மனப்பாடம் செய்ய வேண்டியதில்லை என்று பொருள் இல்லை. மாறாக திறமைகளையும், அறிவையும் பெருக்கிக் கொண்டிருக்க வேண்டும். அப்போதுதான் இந்தக் குர்ஆனின் மூலம் அதிக அளவில் பயன்பெற முடியும். மற்றபடி பயணத்திலிருந்தாலோ, நோயாளியாக இருந்தாலோ தொழுகையை சுருக்கமாக தொழுவது போன்று திருக்குர்ஆனையும் குறைவாக ஓதப்படுகிறது. எனவே சூழ்நிலையைப் பொறுத்து எவ்வளவு ஓத முடியுமோ அவ்வளவு ஒத வேண்டும். பிறகு அல்லாஹ் கூறுகிறான்.

*அல்லது அதில் சிறிது அதிகப்படுத்திக் கொள்வீராக. குர்ஆனை மிகவும் கவனத்துடன் மெதுவாக ஓதுவீராக. (73:5)*

ஒவ்வொரு சொல்லும் மிகத் தெளிவாக உச்சரிக்கும்படி அழகிய ராகத்துடன் ஓத வேண்டும். அஹ்மதியல்லாத பிற முஸ்லிம்கள் தராவீஹ் தொழுகையில் என்ன ஓதுகிறார்கள் என்பது கூட தெரியாத அளவில் மிகவும் வேகவேகமாக ஓதுவார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

அழகிய ராகத்துடன் திருக்குர்ஆன் ஓதுவதும் ஒரு இறைவணக்கமாகும்.

ஒரு ஹதீஸில் இவ்வாறு வருகிறது. ஸயீத் பின் அபீ ஸயீத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். **ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

திருக்குர்ஆனை அழகிய ராகத்துடன் ஓதாதவர் நம்மைச் சேர்ந்தவர் இல்லை. ஓரிடத்தில் அல்லாஹ் இவ்வாறு கட்டளை இடுகிறான்.

*அல்லாஹ் உங்களுக்கு வழங்கிய அருட்கொடையையும், அவன் உங்களுக்கு இறக்கிய வேதத்தையும், ஞானத்தையும் நினைத்துப் பாருங்கள். இதன் மூலம் அவன் உங்களுக்கு அறிவுரை கூறுகிறான். (2:232)*

அதாவது திருக்குர்ஆனில் உள்ள அல்லாஹ்வின் கட்டளைகள் எல்லாம் அல்லாஹ் உங்களுக்கு வழங்கிய அருட்கொடையாகும். சூரா நூரின் தொடக்கத்தில் உங்களுக்கு வழங்கப்பட்ட அருட்கொடையாகிய இதில் பல கட்டளைகள் இருக்கின்றன. இதனை நீங்கள் சிந்தித்துப் பாருங்கள் என்று அல்லாஹ் கூறுகிறான். இதை நீங்கள் ஓதாதவரை இந்த அருட்கொடைகளை தெரிந்து கொள்ள முடியாது. இதை புரிந்து கொள்ள முடியாது. எனவே திருக்குர்ஆனை ஓதுவது அறிவுரை பெறுவதாகும். இது மூஃமின்களுக்கு மிகவும் அவசியமானதாகும். ஏனென்றால் இதுதான் மனிதனை இறையச்சத்தில் உயர்த்துகிறது.

**பிறகு இன்னோரிடத்தில் அல்லாஹ் கூறுகிறான்:**

*வசனங்களை அவர்கள் ஆராய்ந்து பார்ப்பதற்காகவும், அறிவுடையவர்கள் அறிவு பெறுவதற்காகவும் சிறப்புமிக்க இவ்வேதத்தை நாம் உமக்கு இறக்கினோம். (38:30)*

திருக்குர்ஆனை நம்புகின்றவர்களும் அதை ஓதுகின்றவர்களுமே அறிவுடையவர்கள் ஆவர். ஏனென்றால், இந்த நூலில் கடந்த நபிமார்களின் போதனைகளில் இறைவன் இக்காலகட்டத்திற்கும் தேவை என்று கருதிய போதனைகளும் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் இக்காலத்திற்கும் வருங்காலத்திற்கும் இன்னும் கியாமத் நாள் வரை மனிதனுக்குத் தேவையான போதனைகள் அனைத்தையும் இறைவன் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது இறக்கி திருக்குர்ஆனில் பாதுகாத்து வைத்துள்ளான். எனவே, இதை சிந்தித்து நீங்கள் அறிவு பெறுங்கள். அறிவுடையவர்கள் இதிலிருந்து அறிவுரை பெறுகின்றனர் என்று திருக்குர்ஆன் அறிவிப்பு செய்கிறது. இதைப் பேணி நடந்தால்தான் இந்த அறிவிப்பை பற்றி நாம் சர்ச்சை செய்ய முடியும்.

திலாவத்தை எவ்வாறு கேட்க வேண்டும் என்பது பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்:

*(மக்களே!) குர்ஆன் ஓதப்படும் போது அதனை காது கொடுத்து கவனமாகக் கேளுங்கள். மேலும் மவுனமாக இருங்கள். இதனால் நீங்கள் கருணை காட்டப்படுவீர்கள். (7:205)*

இந்த மரியாதையைத் தான் ஒவ்வொரு அஹ்மதியும் திருக்குர்ஆனின் மீது காட்ட வேண்டும். உங்கள் சந்ததிகளிடம் இதன் முக்கியத்துவத்தை உணர்த்த வேண்டும். சிலர் இதில் கவனக்குறைவு காட்டுகிறார்கள். திலாவத்தின் போது பேசிக் கொண்டிருக்கின்றனர். சில நேரம் வீடுகளில் டிவியில் திலாவத் வந்து கொண்டிருக்கும் போது வீட்டில் உள்ளவர்கள் பேச்சில் மூழ்கியிருப்பார்கள். ஒன்று, நீங்கள் பேச்சை நிறுத்தி விட்டு அமைதியாக திலாவத்தை கேட்க வேண்டும். இல்லையென்றால், பேசுவது மிகவும் அவசியம்; பேசாமல் இருக்கவே முடியாது என்றால் டி.வி சப்தத்தை நிறுத்தி விட வேண்டும். திலாவத்தை அமைதியாக கேளுங்கள். இதன் மூலம் பிறர் கூட இதை கேட்பார்கள். இது எவ்வளவு மகத்துவம் மிக்க வேதநூல்! என்று அவர்களும் உணர்வார்கள். இதனால் இறைவன் அவர்கள் மீது கருணை காட்டி அவர்களுக்கு நேர்வழிக்கான வாய்ப்பை வழங்குவான். நமக்கு இதைப் பற்றிய உணர்வு அதிகம் இருக்க வேண்டும். அல்லாஹ்வின் கலாம் ஆகிய இந்த திருக்குர்ஆனை அமைதியாக கேட்டு புரிந்து கொள்ள வேண்டும். இதன் மூலம் அதிக அளவில் அல்லாஹ்வின் கருணையைப் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

**இன்னோரிடத்தில் அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்:**

*(தூதரே!) நீரும் உம்முடன் (இறைவன்பால்) திரும்பியவர்களும் உமக்கு கட்டளை இடப்பட்டவாறு நேரான வழியில் நிலைத்து நிற்பீராக. மேலும் நீங்கள் வரம்பு மீறாதீர்கள். நீங்கள் செய்து கொண்டிருப்பதை நிச்சயமாக அவன் பார்க்கின்றான். (11:113)*

இந்தக் கட்டளை ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்காக மட்டும் கிடையாது. ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது இறக்கப்பட்ட எல்லா கட்டளைகளும் முழு உலகத்திற்கும் உள்ள கட்டளையாகும். ஆனால் இந்த வசனத்தில் மூஃமின்களையும் தவ்பா செய்பவர்களையும் சேர்த்து வழங்கப்பட்ட கட்டளையாகும். எல்லா கட்டளைகளின் மீது உறுதியாக நிலைத்திருந்து பிறரையும் நிலைத்திருக்கச் செய்வீராக என்று அல்லாஹ் கூறுகிறான். இபாதத்துகளை மட்டும் நம்பியிருக்காதீர்கள். மாறாக அதன் அசல் நோக்கத்தையும் கவனத்தில் கொள்ளுங்கள். அசல் நோக்கம் அல்லாஹ்வின் விருப்பமாகும். நாங்கள் தவ்பா செய்து விட்டோம் என்று கூறுபவர்களுக்காக அல்லாஹ் இந்தக் கட்டளையை விதித்து எல்லாரும் இறைவனால் விதிக்கப்பட்ட எல்லையைப் புரிந்து கொண்டு முடிந்தவரை இதைப் புரிந்து செயல்படுங்கள் என்று அல்லாஹ் கூறுகிறான். ஒருபோதும் வரம்புகளை மீறாதீர்கள். அப்போதுதான் அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெற முடியும். நாம் நமது குழந்தைகளுக்கும் இதற்கேற்றவாறு தர்பிய்யத் வழங்க வேண்டும். இந்த வேதத்தின் மீது நன்றாக புரிந்து கொண்டு செயல்படுபவர்களாக அவர்களையும் வளர்க்க வேண்டும். இதை அவர்களின் வாழ்க்கையில் செயல்படுத்துபவர்களாக அவர்கள் இருக்க வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதை விளக்கியவாறு ஓரிடத்தில் கூறுகிறார்கள்:**

இந்துக்கள் மரணத்திற்கு அஞ்சும் அளவுக்குக்கூட முஸ்லிம்கள் அஞ்சுவதில்லை. ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களை ''உமக்கு கட்டளையிடப்பட்டது போன்று நீர் வழிநடப்பீராக'' என்ற ஒரு கட்டளை கிழவனாக்கி விட்டது. மரணத்தை எவ்வளவு உணர்ந்திருக்கிறார்கள்! ஏன் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு இந்த நிலை ஏற்பட்டது? இதிலிருந்து நாம் படிப்பினை பெற வேண்டும் என்பதற்குத்தான் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு இந்தக் கட்டளை வந்தவுடன், என்னை இந்த வசனம் கிழவனாக்கி விட்டது என்று கூறினார்கள். உம்மத்தில் அவர்களை ஏற்றுக் கொண்டவர்களுக்கும் இதிலிருந்து படிப்பினை பெற வேண்டும் என்பதற்காக அவ்வாறான நிலை ஏற்பட்டது. உம்மத்தைப் பற்றிய கவலை அவருக்கு இருந்தது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொடர்ந்து கூறுகிறார்கள்:**

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தூய வாழ்விற்கு இதை விட வேறு என்ன ஆதாரம் வேண்டும்? அல்லாஹ் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களை முழுமையான வழிகாட்டுபவராக (ஹாதியே காமில்) அனுப்பினான். கியாமத் நாள் வரை முழு உலகிற்காகவும் அனுப்பினான். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்க்கையின் முழு காலகட்டமும் ஒட்டுமொத்தமாக செயல்வடிவிலான போதனைகள் ஆகும். திருக்குர்ஆன் அல்லாஹ்வின் சொற்களைக் கொண்ட வேத நூலாகும். இயற்கைச் சட்டங்கள் இறைவனின் செயலாகும். இவ்வாறு ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்க்கை செயல்வடிவிலான ஒரு நூலாகத் திகழ்கிறது. இது திருக்குர்ஆனின் விளக்கமும் தஃப்ஸீருமாக இருக்கிறது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதை இன்னும் விளக்கியவாறு இவ்வாறு எழுதுகிறார்கள்:**

மக்களின் கேள்விக்கு ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சூரா ஹூத் என்னை கிழவனாக்கி விட்டது என்று கூறினார்கள். ஏனென்றால், இந்தக் கட்டளையின் மூலம் என் மீது மிகப்பெரிய பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது என்றார்கள். தம்மை நேர்மையாக வைத்துக் கொண்டு அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு தமது வட்டத்தில் சக்திக்கு உட்பட்டு முழுமையாக கட்டுப்பட்டு நடக்க முடியும். ஆனால் பிறரையும் இவ்வாறு ஆக்குவது எளிதல்ல. ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உயர் தகுதியும் தூய்மைப்படுத்தும் ஆற்றலும் இதிலிருந்து தெரிய வருகிறது. இந்தக் கட்டளையை ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள்

எவ்வளவு அழகிய முறையில் நடைமுறைப்படுத்தினார்கள்! சஹாபாக்களின் தூய்மையான ஜமாஅத்தை உருவாக்கினார்கள்!

மக்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட நீங்கள் (எல்லாரையும் விட) சிறந்த உம்மத் ஆவீர்கள் (3:111) என்றும் அல்லாஹ் அவர்களிடம் நன்கு திருப்தி கொண்டுள்ளான். (5:120, 9:101, 58:23, 98:9) என்றும் அல்லாஹ் அவர்களைப் பார்த்து கூறும் அளவுக்கு தூய ஜமாஅத்தை உருவாக்கினார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வாழ்நாளில் மதீனா தய்யுபாவில் முனாஃபிக்குகளாக யாருமே இல்லை. வேறு எந்த நபியின் வாழ்நாளில் இப்படி ஒரு வெற்றி கிடைத்திராத அளவிற்கு ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு கிடைத்தது. வெறுமனே வாய்ப்பேச்சு மட்டும் இருக்கக் கூடாது என்பதற்காக இறைவன் இந்த வெற்றியை வழங்கினான். வெறும் வாய்ப்பேச்சும் வெளிக்காட்டுதலும் மட்டும் நம்மிடம் இருக்கும் என்றால் நமக்கும் பிறருக்கும் மத்தியில் என்ன வித்தியாசம் இருக்கும்? பிறரை விட நமக்கு என்ன சிறப்பு இருக்கிறது?

வெறும் வாய்ப்பேச்சால் எந்த பயனும் இல்லை. அல்லாஹ்வின் கட்டளைகளை நன்கு புரிந்து கொண்டு அதற்கு ஏற்ப வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற பாடம் நமக்கு இதில் இருக்கிறது. ஏனென்றால் இதுதான் இறைவனின் கட்டளையாகும்.

**இறைவன் கூறுகிறான்:** *நாம் இறக்கிய இந்த வேத நூல் அருளுக்குரியதாகும். எனவே நீங்கள் இதனைப் பின்பற்றுங்கள். உங்களுக்குக் கருணைகாட்டப்பட இறையச்சத்தைக் கைக்கொள்ளுங்கள். ( 6:156)*

சமூக அமைதிக்கு மிகவும் முக்கியமாக தேவைப்படுகின்ற ஒன்றை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

அல்லாஹ் கூறுகிறான்: நம்முடைய வசனங்களில் நம்பிக்கை கொள்பவர்கள் உம்மிடம் வரும்போது நீர் (அவர்களிடம்) கூறுவீராக. உங்களுக்கு என்றென்றும் சாந்தி உண்டாவதாக. உங்கள் இறைவன் உங்களுக்கு கருணை காட்டுவதைத் தன் கடமையாகக் கொண்டுள்ளான். (இது இவ்வாறு) உங்களுள் எவராவது அறியாமையினால் ஏதாவதொரு தீமையைச் செய்து, பின்னர் மனம் வருந்தியும் திருந்திக் கொள்ளவும் செய்தால், நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்பவனும் மேன்மேலும் கருணை காட்டுபவனும் ஆவான் (6:55) என்பதை நினைவில் கொள்ளட்டும்.

சமூகத்தின் அழகைக் கூட்டுகின்ற போதனையாகும். இது ஒருவர் மற்றவருக்கு சாந்தி உண்டாவதாக என்று வேண்டும் போது ஒருவருக்கொருவர் கொள்கின்ற மனவருத்தம், புகார்கள், தூரம் அனைத்தும் தானாகவே முடிந்துவிடும். சகோதரர் பிற சகோதரரோடு சண்டையிட்டுக் கோபப்பட்டிருந்தால் அவர்களுக்கு மத்தியில் சீர்திருத்தம் ஏற்படும். நாம் அஹ்மதிகள் ஆவோம் என்றும் திருக்குர்ஆனின் மீது நமக்கு முழு நம்பிக்கை இருக்கிறது என்றும் நாம் அதன் போதனையின்படி செயல்பட முயற்சி செய்கிறோம் என்றும் வாதம் செய்கிறோம். அன்பின், சமாதானத்தின் தூதைப் பரப்புங்கள் என்று திருக்குர்ஆன் சொல்கிறது. ஆனால் இங்கு சிலர் மற்றவர் மீது கோபத்தை வெளிப்படுத்துகிறார்கள். எனவே, சிந்திக்க வேண்டும். சின்னச்சின்ன விஷயத்திற்காக திருக்குர்ஆனின் உயர்தரமான போதனைகளை கைவிட்டு விடக்கூடாது. திருக்குர்ஆனை ஓதுவதற்கும் புரிந்து கொள்வதற்கும் ஒவ்வொரு அஹ்மதியும் முயற்சி செய்ய வேண்டும். இந்த வேத நூலில் கூறப்படாத விஷயங்கள் ஏதும் கிடையாது. எனவே சமூகத்தின் அமைதிக்காகவும் உங்கள் ஆன்மீக வளர்ச்சிக்காகவும், இறைவனின் நெருக்கத்தைப் பெறுவதற்காகவும் நாம் திருக்குர்ஆனின் கட்டளைகளை கவனத்தில் கொண்டு அதன்படி செயல்பட முயற்சி செய்வது அவசியமாகும். நாம் முறைப்படி தொடர்ந்து திலாவத் செய்து அதன் மீது கவனம் செலுத்துபவர்களாக இருந்தால்தான் இது முடியும்.

நான் ஒரு சில விஷயங்களைத்தான் இதில் கூறி இருக்கிறேன். மீதி அடுத்த (குத்பாக்களில்) கூறுவேன்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

திருக்குர்ஆனின் மீது சிந்தனை செய்யுங்கள். இதில் எல்லாமே இருக்கிறது. நன்மை மற்றும் தீமைக்கு இதில் விளக்கம் இருக்கிறது. வருங்காலத்தின் முன்னறிவிப்புகள் இருக்கின்றன. எந்த ஆட்சேபனைக்கும் சற்றும் இடமளிக்காத மார்க்கத்தை இது கற்பிக்கிறது. ஏனென்றால் இதன் அருள்களும் பயன்களும் உடனடியாக கிடைக்கின்றன இஞ்சீலில் (பைபிளில்) மார்க்கம் முழுமையாகக் கூறப்படவில்லை. இதன் போதனைகள் அந்த காலத்திற்கு ஏற்றதாக இருந்திருக்கலாம். ஆனால் நிரந்தரமாக போதனைகளையும் சூழ்நிலைக்குப் பொருத்தமான போதனைகளையும் கொண்டது அல்ல. இந்தச் சிறப்பு திருக்குர்ஆனுக்கு மட்டுமே உள்ளது. இதில் எல்லாவித (ஆன்மீக, பௌதீக) நோய்களுக்கும் மருந்தும் நிவாரணமும் இருக்கிறது. இதில் இறைவன் எல்லா திறன்களுக்கும் தர்பிய்யத் வழங்கியிருக்கிறான். தீமைகளை அகற்றுவதற்கான வழியையும் இதில் (அல்லாஹ்) கூறியிருக்கிறான். எனவே எப்போதும் திருக்குர்ஆனை ஓதிக்கொண்டிருங்கள். துஆ செய்து கொண்டிருங்கள். உங்கள் நடவடிக்கைகளை அதன் போதனைகளின் கீழ் அமைப்பதற்கு முயற்சி செய்யுங்கள்.

இதை ஓதுவதற்கும், புரிந்து கொள்வதற்கும் இதன்படி செயல்படுவதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக. இதன் மூலம் நாமும், இறை விருப்பத்தைப் பெற்று நமது சந்ததிகளும் திருக்குர்ஆனின் அழகிய போதனையின் பக்கம் கவனமூட்டுபவர்களாக இருக்க வேண்டும். அவர்களின் உள்ளத்திலும் திருக்குர்ஆனின் நேசத்தை உருவாக்குபவர்களாக இருக்க வேண்டும்.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 04.09.2009**

Translated by : **Maulavi S. ABDUL QADIR**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**